# ශ්‍රී ලංකා පරිපාලන සේවා සංගමය
# ஸ்ரீ லங்கா நிருவாக சேவைச் சங்கம்
# SRI LANKA ADMINISTRATIVE SERVICE ASSOCIATION

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My Ref. | SASA/2023/AGM/1 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your Ref. | - | දිනය<br>திகதி<br>Date | 2023.06.05 |

**அனைத்து** SASA **கிளைத் தலைவர்கள்/ செயலாளர்களுக்கு,**
**அனைத்து** SASA **உறுப்பினர்களுக்கு,**

**இலங்கை நிர்வாக சேவை சங்க (SASA) யாப்பின் பிரிவு - 10.4 கீழ் வெளியிடப்படும் 40 வது ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்**

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் (SASA) 40 வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2023 ஜூன் 27 ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை), 1030 மணிக்கு 275/74, ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரியில் அமைந்துள்ள, மேல் மாகாண அழகியல் ஓய்வு விடுதியில் நடைபெறும் என்பது இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை நிர்வாக சேவை சங்க (SASA) யாப்பின் பிரிவு 10.5 இன் கீழ் ஏதேனும் பொருத்தமான பிரேரணைகள் மற்றும் எதிர்வரும் ஆண்டுக்கான பின்வரும் நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக முன்மொழியப்பட்ட பெயர்கள் இருப்பின் விதந்துரைக்கப்பட்ட நியமன விண்ணப்ப படிவத்தில் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லது நேரில் அல்லது தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம், 2023 ஜூன் 19 ஆம் திகதி 1600 மணிக்கு முன்னர் முன் SASA செயலாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பம் கிடைத்தமை தொடர்பில் உங்களுக்கு அறியத்தரப்படும்.

a. தலைவர்
b. பிரதி தலைவர் (5)
c. செயலாளர்
d. பிரதிச் செயலாளர்
e. உதவிச் செயலாளர்
f. பொருளாளர்
g. உதவிப் பொருளாளர்
h. பத்திராதிபர்
i. உதவி பத்திராதிபர்
j. தேசிய அமைப்பாளர்
k. நிர்வாக உறுப்பினர்கள் (9)

நியமனப் படிவம் (விண்ணப்பம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, மேலும் உங்கள் மாவட்ட/கிளை சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் SASA வின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிர்வாகக்குழு உறுப்பினர்களைதேர்ந்தெடுப்பதற்கான தேர்தலானது மேல் மாகாண அழகியல் ஓய்வு விடுதியில் அன்றைய தினம் காலை 0700 மணி தொடக்கம் 1000 மணி வரை நடைபெறும்.

இதுவரை SASA அங்கத்துவத்தைப் பெறாத எவரேனும் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டத்திலும், தேர்தலிலும் பங்கேற்க விரும்பினால், SASA இல்லத்திலிருந்து 2023 ஜூன் 19ஆம் தேதிக்கு முன்னர் அங்கத்துவத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டின் ஊடாக பதிவு செய்வதன் மூலம் உங்கள் பங்கேற்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

SCAN ME

நன்றி

**லீலாநாத் விக்கிரமராச்சி,**
செயலாளர்

23 සී, සමුළු නිවාස, කැප්පෙටිපොල මාවත, කොළඹ 05. 23 சீ, சமிட் தொடர்மாடி,கெப்பிட்டிப்பொல மாவத்தை, கொழும்பு-05.
23C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05.
දුරකතනය/ தொலைபேசி/Telephone : 011 5766855 ෆැක්ස්/தொலைநகல்/ Fax : 011 2058027
විද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/ Email : exco@sasa.lk වෙබ් අඩවිය/இணையத்தளம்/ Web: www.sasa.lk